# இலங்கை வங்கி

**இலங்கையின் 1ஆம் தர வங்கியுடன் இணைந்து வெற்றிகரமான தொழில்வாய்ப்பொன்றை உருவாக்குங்கள்!**

வங்கியியற் துறையில் தமது எதிர்காலத்தைக் கட்டமைத்துக்கொள்ள விரும்பும் தகுதியும் ஆற்றலும் உயர் குறிக்கோள்களும் உடைய இளம் விண்ணப்பதாரிகளிடமிருந்து கீழ்க்காணும் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

# முகாமைத்துவப் பயிலுநர்

(வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் மட்டுமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன)

## தகுதிப் பிரமாணங்கள்

➢ **இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்**

➢ **தகைமைகளும் அனுபவமும்**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பின்வரும் ஏதேனும் துறையில் குறைந்தது இரண்டாம் வகுப்பு (உயர் பிரிவு) அல்லது 4.0 என்ற ஆகக்கூடிய சராசரித் தரப் புள்ளியில் (GPA) குறைந்தது 3.5 புள்ளிகளுடன் பட்டம் பெற்றிருத்தல்.

பொருளியல், புள்ளிவிவரவியல், கணிதம், கணக்கியல், வங்கியியல், நிதியியல், வணிகம், வியாபார நிர்வாகம், முகாமைத்துவம் (பொது/நிதியியல்/கணக்கீடு/ வியாபாரம்), சந்தைப்படுத்தல், மனித வளம், பொறியியல், கணினி விஞ்ஞானம், பௌதீக விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், சட்டம், சர்வதேச வியாபாரம், மதிப்பீடு, விவசாயம் அல்லது வங்கியால் தீர்மானிக்கப்படும் வங்கியியல் மற்றும் நிதியியல் தொடர்பான ஏதேனும் ஒரு துறை.

**அல்லது**

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மேலே (அ) பந்தியில் குறிப்பிட்டுள்ள துறைகளில் முதுமாணி அல்லது அதற்கும் கூடிய பட்டப்பின் படிப்புத் தகைமையுடனான பட்டம்.

**அல்லது**

இ) இலங்கை மத்திய வங்கியால் அதிகாரமளிக்கப்பட்ட வங்கி அல்லது நிதி நிறுவனமொன்றில் நிறைவேற்று மட்டத்தில் குறைந்தது ஓராண்டு பணியாற்றிய அனுபவத்துடன் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தில் (IBSL) அல்லது ஐக்கிய இராச்சிய வங்கியாளர் பட்டய நிறுவனத்தில் (CIB) இணை உறுப்பினராக இருத்தல்.

**அல்லது**

ஈ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இரண்டு (02) ஆண்டுகள் நிறைவேற்று மட்டத்தில் பணியாற்றிய அனுபவத்துடன் பின்வரும் தொழில்முறைக் கணக்கீட்டுச் சபைகளில் ஏதேனும் ஒன்றில் இணை உறுப்பினராக இருத்தல். அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மேலே 'அ' பகுதியில் குறிப்பிட்டுள்ள எவையேனும் துறைகளில் பட்டம் பெற்றிருத்தல் மற்றும் பின்வரும் ஒன்றில் முழுத் தகைமையுடன் (இறுதிச் சித்தி) பெற்றிருத்தல்.

- இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICA-SL)
- பட்டயச் சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA-UK)
- CFA நிறுவன பட்டய நிதியியல் பகுப்பாய்வுத் திட்டம் (CFA-USA)
- UK முகாமைத்துவக் கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA-UK)
- இங்கிலாந்து, வேல்ஸில் உள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனம் (ICA-EW)

**அல்லது**

உ) வங்கியியல் அல்லது அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனமொன்றில் இரண்டு ஆண்டுகள் நிறைவேற்று மட்டத்தில் பணியாற்றிய அனுபவத்துடன் சட்டத்தரணி இறுதிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருத்தல்.

➢ **ஏனைய தகைமைகள்**

- வங்கியின் இலக்குகளை அடைவதற்கு ஈடுபாடு, அர்ப்பணிப்புடன் கூடிய நல்ல மனநிலை
- அழுத்தங்களுக்கு மத்தியிலும் வினைத்திறனுடன் செயலாற்றத்தக்க ஆற்றல்
- தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டிருத்தல்
- குழுவாகச் செயற்படும் ஆற்றலும் தொடர்பாடற் திறன்களும்
- தகவல் தொழில்நுட்ப அறிவு
- ஆங்கிலம், சிங்களம்/தமிழ் மொழிகளில் வல்லமை

➢ **வயது**

விண்ணப்ப முடிவுத் திகதியில் 28 வயது அல்லது அதற்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

## விதிகளும் நிபந்தனைகளும்

- பயிற்சிக் காலம் 02 ஆண்டுகளாகும். இப்பயிற்சிக் காலத்தில் மாதாந்த கொடுப்பனவாக முதலாமாண்டில் 90,000 ரூபாயும் இரண்டாமாண்டில் 100,000 ரூபாயும் வழங்கப்படும்.
- இப்பதவி வழமையான வங்கியியற் சேவையின் (திறந்த சேவை) பொது விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகும்.
- பயிற்சிக் காலத்தில் ஆற்றிய சேவையில் வங்கி திருப்தியடையும் பட்சத்தில் நிறைவேற்று உத்தியோகத்தர் தரத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.
- தேவைப்படும் போது வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- முகாமைத்துவம் முடிவுசெய்தாலே ஒழிய, பயிலுநர்கள் தாம் பணிக்கமர்த்தப்படும் மாகாணத்தில் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகள் (இரண்டு ஆண்டுகள் பயிற்சிக் காலம் உட்பட) கட்டாயம் பணியாற்ற வேண்டும்.

## தெரிவு நடைமுறை

- தகுதியான விண்ணப்பதாரர்கள் பட்டியலிடப்பட்டதன் பின்னர் போட்டிப் பரீட்சை, அதைத் தொடர்ந்து நேர்முகத்தேர்வு(கள்) என்ற அடிப்படையில் தெரிவுகள் நடைபெறும்.
- மேற்குறிப்பிட்ட ஐந்து மாகாணங்களினதும் தேவைகளைப் பொருத்து தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- பரீட்சையில் கருத்திற் கொள்ளப்படும் வினாத்தாள்கள்

  வினாத்தாள் I - பகுப்பாய்வுத் திறன்கள் (IQ), பொது அறிவு மற்றும் தகவல் தொழிநுட்பம்

  வினாத்தாள் II - ஆங்கில மொழி

  வினாத்தாள் III - உளச்சார்பு
- போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்படும் புள்ளிகள் நேர்முகத்தேர்வுக்குத் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளைப் பட்டியலிடவே பயன்படுத்தப்படும். நேர்முகத்தேர்வில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளுக்கு அமையவே இறுதித் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

## விண்ணப்ப நடைமுறை

www.boc.lk என்ற எமது இணையதளத்தில் Careers என்ற பகுதியின் கீழ் தரவிறக்கிக்கொள்ளக்கூடிய மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி உங்களது சுயவிபரக் கோவையினைத் தயாரித்து அதனை பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, தொடர்புடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்கள், தொழில் அனுபவத்தை எண்பிக்கும் ஆவணங்கள் என்பவற்றின் நிழற்பிரதியுடன் இணைத்து 2024 ஜுலை 20ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும்.

வடக்கு, கிழக்கு, வடமத்தி, வடமேல் மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களில் மட்டுமே வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆகையால் விண்ணப்பதாரிகள் பதவியின் பெயரையும் தாம் விண்ணப்பிக்கும் மாகாணத்தையும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பதாரிகள் வெவ்வேறு மாகாணங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்புமிடத்து அவ்வனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படுவதோடு தகுதியற்றவையாகவும் கருதப்படும்.

பட்டத்தினதும் ஏனைய தொழில்சார் தகைமைகளினதும் செல்லுபடியாகும் திகதி விண்ணப்ப முடிவுத் திகதியாகவோ அதற்கு முற்பட்டதாகவோ இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தேவையான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படாத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**'இலங்கை வங்கிச் சதுக்கம்'**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை**
**கொழும்பு -01.**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும் / இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு
- வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்